
# 20. எங்களுக்கு நல்வழி காட்டுபவர்கள்




ஆசிரியை கோயிலுக்குப் போகும் வழியில். ஆனந்தியின் வீட்டிற்கு வந்தார். ஆனந்தியும் அவளது அம்மாவும் ஆசிரியையை அன்புடன் வரவேற்றார்கள். ஆனந்தியைப். பற்றி ஆசிரியை அவள் தாயிடம் இவ்வாறு கூறனார். "ஆனந்தி மிகவும் நல்லவள். நன்றாகப் படிக்கிறாள். அவள் புத்தகம் பத்திரிகை வாசிப்பதில் விருப்புடையவள் அவளுக்கு வாசிப்பதற்கு புத்தகங்கள் வாங்கிக்கொடுங்கள்" என்று கூறினார்.



ஆனந்தியின் அண்ணா நிமல் ஓடி வந்தான். அவன் யாரென்று ஆசிரியை கேட்டார். அவர் தனது அண்ணா என்று ஆனந்தி மகிழ்வுடன் கூறினாள். ஆசிரியை அவனது பெயரையும் பாடசாலையைப் பற்றியும் கேட்டார். "எனது பெயர் நிமல். எங்களுக்கு கற்பிக்கும் அருட் சகோதரர் மிகவும் நல்லவர். அவர் எங்களுக்கு நல்வழி காட்டுகிறார்" என்று நிமல் கூறினான்.



மறைக்கல்வி வகுப்பில் கற்பிக்கும் அருட் சகோதரியும் மிகவும் நல்லவர். அவர் எங்களில் மிகவும் அன்புடையவர் என்றாள் "இரண்டு பேரும் கோயிலுக்குப் போக என்னோடு வாருங்கள். பங்குத் தந்தையை உங்களுக்கு அறிமுகம் செய்கிறேன்" என ஆசிரியர் கூறினார்.



பங்குத் தந்தையை எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் யேசுவைப் பற்றி எங்களுக்குச் சொல்லித்தருவார். பூசையும் ஒப்புக் கொடுப்பார்.

எங்களுடைய பிள்ளைகள் அதிஷ்டசாலிகள் அருட் தந்தை, அருட் சகோதரர், அருட் சகோதரி, ஆசிரியர்கள் எல்லோரும் இந்தப் பிள்ளைகளுக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். அவர்களைத்தந்தற்காக இறை தந்தைக்கு நன்றி கூறுவோம்.